# COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,
# KANNIYAKUMARI AT NAGERCOIL.

11.06.2025

O.S. No. 120/2022

P.W.1 திரு.பால்சுரேஷ்குமார்

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் தரப்பில்) -**

கன்னியாகுமரி மாவட்டம் முருகன் குன்றம் அருள்மிகு வேல்முருகன் திருக்கோவில் மிகவும் பிரசித்திப்பெற்ற கோவில் என்றால் அது குறித்து எனக்கு தொியாது. பல தலைமுறையிலாக அந்த கோவில் உள்ளது என்றால் சரிதான். அந்த கோவில் வேல்முருகன் குன்றம் நற்பணி மன்றம் என்ற பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால் நடத்தப்படுகிறது என்றால் அது குறித்து எனக்கு தொியாது. அந்த கோவிலில் உள்ள நிர்வாகிகளுக்கும், எனக்கும் எந்த விரோதமும் கிடையாது என்றால் சரிதான். இந்த வழக்கில் 1 ஆம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ள சிவபாலகிருஷ்ணன் விவேகானந்தா கேந்திரத்தில் நிர்வாக அதிகாரியாக பணிபுாிந்து ஓய்வு பெற்றவர் என்றால் அது குறித்து எனக்கு தொியாது. 2 வது பிரதிவாதி கருணாகரன் விவேகானந்தா கல்லூரியில் துணை முதல்வராக இருந்து ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான். 3 ஆம் பிரதிவாதி குருசாமி விவேகானந்தா கல்லூரியில் பொருளாதார பிாிவின் தலைவராக இருக்கிறார் என்றால் அது குறித்து எனக்கு

தொியாது. அவர்கள் அனைவரும் கவுர பதவியாக அந்த கோவிலை நிர்வாகித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அந்த கோவிலில் வருடத்திற்கு 60 லிருந்து 70 திருமணங்கள் நடைபெறும் என்றால் அது குறித்து எனக்கு தொியாது. எனக்கு இரண்டு குழந்தைகள். ஒரு ஆண், ஒரு பெண். எனது மகன் சுகேஷ் குமரன் தற்போது எங்கு இருக்கிறார் என்றால் துபாயில் இருக்கிறார். அவருடைய பிறந்த தேதி 26.05.2000 என்றால் சரிதான். எனது மகனும், வழக்குரையில் சொல்லியுள்ள ராஜரீகம் கணவன் மனைவியாக வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. ராஜரீகம் எங்குள்ளார் என்றால் காணிமடத்தில் குடியிருக்கிறார். அது எங்கள் வீட்டிலிருந்து எவ்வளவு தூரம் என்றால் நாங்கள் முன்னாள் குடியிருந்த வீட்டிலிருந்து 1 கிலோமீட்டர் தொலைவு இருந்தது. எனது மகனும் ராஜரீகமும் காதலித்து திருமணம் செய்து கொண்டார்கள் என்றால் இல்லை. முருகன் குன்றத்தில் வைத்து திருமணம் நடக்க வேண்டும் என்றால் அதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும் என்றால் சரிதான். அந்த விண்ணப்பம் எனது மகனும், ராஜரீகமும் சேர்ந்து சமர்ப்பித்த விண்ணப்பம் என்றால் அது குறித்து எனக்கு தொியாது. அந்த விண்ணப்பத்தில் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் எங்கள் குடும்ப அட்டை, எனது மகனின் ஆதார் அட்டை மற்றும் பாஸ்போர்ட் நகல்கள் என்றால் அது குறித்து எனக்கு தொியாது. அதேபோல ராஜரீகம் கொடுத்த விண்ணப்பத்தை பற்றியும், அதில் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் பற்றியும் எனக்கு தொியாதா என்றால் தொியாது. ராஜரீகத்தை எனக்கு எவ்வளவு நாட்களாக தொியும் என்றால் திருமண சான்றிதழை பற்றி தொிந்த பிறகு தொியும். வா.சா.ஆ. 2 திருமண சான்றிதழ் எப்படி

கிடைத்தது என்றால் நான் எனது மகனை திருமணம் முடிந்ததாக சொல்லும் தேதிக்கு பிறகு கூட்டி கொண்டு போய்விட்டேன், ராஜரீகம் அஞ்சுகிராமம் காவல் நிலையத்தில் தனது கணவரை காணவில்லை என புகார் கொடுத்ததாகவும், அந்த புகாருடன் இந்த சான்றிதழை இணைத்து கொடுத்ததாகவும், காவல் நிலைய உதவி ஆய்வாளர் சொன்னார். அவர்களிடமிருந்து இந்த ஆவணம் கிடைத்தது. வா.சா.ஆ. 2 ஆவணத்தை பெற்றபிறகு அதில் குறிப்பிட்டுள்ள சாட்சிகளிடம் திருமணத்தை பற்றி விசாரித்தேனா என்றால் இல்லை. அவ்வாறு திருமணம் ஆனதாக எனக்கு எவ்வளவு நாட்களாக தொியும் என்றால் செப்டம்பர் 2020 ல் தொிய வந்தது. ராஜரீகம் இந்து மதத்தை சேர்ந்தவர் என்றால் இல்லை, கிறிஸ்தவர். ராஜரீகம் எந்த சர்ச்சில் உறுப்பினராக இருக்கிறார் என்றால் அது குறித்து எனக்கு தொியாது. ராஜரீகமும், தங்கராஜ் என்பவரும் HMOP. 64/2009 ன் படி நாகர்கோவில் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து மனு சமர்ப்பித்து உத்தரவு பெற்றுள்ளார்கள் என்றால் அது குறித்து எனக்கு தொியாது. ராஜரீகத்தின் மதத்தை காட்டுவதற்கும், வயதை காட்டுவதற்கும் உரிய ஆவணங்களை சமர்ப்பித்தபிறகுதான் பிரதிவாதிகளின் கோவிலில் திருமணம் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தொியாது. எனது மகனிடம் இந்த திருமணத்தை பற்றி கேட்டேனா என்றால் இல்லை. எனது மகனும் இந்த திருமணத்தை இது வரையில் ஆட்சேபித்து எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். எனது மகனுக்கும், ராஜரீகத்திற்கும் நடந்த திருமணத்தை பற்றி செய்தித்தாள்களில் நானோ, எனது மகனோ விளம்பரம் எதுவும் கொடுத்தோமா என்றால் இல்லை. முருகன் குன்றத்தில்

நடந்த திருமணத்தை எனது மகனும், ராஜரீகமும் பதிவாளரிடம் பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. ராஜரீகம் கிறிஸ்தவர் என்பதை காட்டுவதற்கு என்னிடம் எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். காவல் நிலையத்திலிருந்து எனக்கு தந்ததாக சொல்லப்படும் திருமண சான்றிதழ் எனது மகனால் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. ராஜரீகம் கொடுத்த புகார் என்ன ஆனது என்றால் உயர் நீதிமன்றத்தால் நீக்கரவு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு ஒரு வழக்கு காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டதாகவோ, அது உயர்நீதிமன்றத்தால் பிற்பாடு ரத்து செய்யப்பட்டதாகவோ, வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது மகன் துபாய் க்கு எந்த ஆண்டு சென்றார் என்றால் 2024 வது வருட கடைசியில் சென்றார். 2021 முதல் 2024 வரையில் எனது மகன் எங்கு வேலை செய்தார் என்றால் மங்களூரில் வேலை செய்தார். ராஜரீகத்தை நான் கடைசியாக பார்த்து எவ்வளவு நாட்கள் ஆனது என்றால் 2021ல் போலீசில் புகார் கொடுத்த சமயத்தில் பார்த்ததுதான். எனது மகன் மங்களூரில் இருக்கும்போது மாதத்திற்கு ஒரு முறை பார்க்க வருவாரா என்றால் சரியல்ல. ஆறு மாதத்திற்கு ஒரு முறை வருவார். எனது மகனும், ராஜரீகமும் கணவன் மனைவியாக வாழ்ந்து வருகிறார்கள் என்றாலும் எனக்கு அந்த திருமணத்தில் விருப்பம் இல்லாததால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த திருமணத்திற்கு சாட்சியாக கையொப்பமிட்டுள்ள திருதமிழ்தேவனார் என்பவர் மற்றும் விஜயகுமார் ஆகியோர் எங்களுடைய உறவினர்களா என்றால் இல்லை, அவர்கள் யார் என்று

தொியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 2 ஆவணத்திலும் அவர்களுடைய இரண்டு பெயர்களும் சாட்சியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதன்பிறகாவது அவர்களிடம் நான் விசாரித்தேனா என்றால் தேவையில்லாததால் விசாரிக்கவில்லை. நானும், எனது மகனும் இந்து மதத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எனது மகனிடம் திருமணத்திற்காக கோவில் மனு கொடுத்தேனா என்று கேட்டேனா என்றால் அவன் குழம்பி இருந்தான் அதனால் கேட்கவில்லை. 2021 லிருந்து தற்போது வரையில் குழப்பத்தில்தான் இருக்கிறாரா என்றால் இல்லை, தற்போது தெளிவாகிவிட்டார். எப்போது தெளிவானார் என்றால் 2023 லிருந்து எங்களிடம் வந்த பிறகு தெளிவாகிவிட்டார். அது வரை ராஜரீகத்துடன் வசித்து வந்தாரா என்றால் இல்லை, திருச்சியில் வேலை பார்த்து வந்தார், அங்கு வசித்து வந்தார். எனது மகன் திருச்சியில் வேலை பார்த்து வந்ததாக கூறுவது இந்த வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல. ஆவணங்கள் உள்ளது. அந்த ஆவணங்களை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும். அந்த திருமண சான்றிதழ்களை பிரதிவாதிகள் 3 பேரும் வழங்கியதால் முருகன்குன்றம் வேல்முருகன் மட்டும் அல்லாது இந்து தர்மத்திற்கு களங்கம் ஏற்படுத்தியதாக சொல்வது வழக்கிற்காக நான் சொல்லும் பொய் என்றால் சரியல்ல. இந்த பிரதிவாதிகள் எந்த ஒரு சட்ட விரோத செயலும் செய்யவில்லை என்றாலும் முறையான ஆவணங்கள் சமர்பித்ததின்பேரில் திருமணம் நடத்தப்பட்டு திருமண சான்றிதழ் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. இந்த திருமணம் மோசடியானது என்று நானோ, எனது மகனோ வழக்கு தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான், நஷ்டஈடு

தான் போட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த திருமணம் நடத்தி சான்றிதழ் வழங்கிய பிறகு இந்த பிரதிவாதிகளுக்கும், எங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் இரண்டாம் பிரதிவாதி கருணகாரன் என்பவரிடம் கேட்டோம், திருமணம் உரிய முறைபடியாகதான் நடந்தது என கூறிவிட்டார். பிரதிவாதிகளின் சட்ட விரோத செயலால் குடும்பத்தினருக்கு பொதுமக்கள் மத்தியில் தலைகுனிவு, அவமானம் ஏற்பட்டது என்பதும் வழக்கிற்காக நான் சொல்லும் பொய் என்றால் சரியல்ல. எங்களுக்கு அவமானம் மற்றும் தலைகுனிவு என்பவது எனது மகனும், ராஜரீகம் திருமணம் செய்து கொண்டதாலா என்றால் இல்லை, பிரதிவாதிகள் அளித்த திருமண சான்றிதழ் தான் அவர்கள் திருமணம் செய்து கொண்டதாக காட்டுகிறது அதனால் அந்த சான்றிதழால் தான் எங்களுக்கு அவமானம், தலைகுனிவு ஏற்பட்டது. நான் முதலில் ரூபாய் 50 லட்சம் நஷ்டஈடு கேட்டு அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு பிரதிவாதிகள் தங்கள் தரப்பில் எந்த தவறும் செய்யவில்லை என கூறி பதில் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். தற்போது இந்த வழக்கில் எவ்வளவு நஷ்டஈடு கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கில் ராஜரீகத்தை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கு எதிராக நான் தாக்கல் செய்துள்ள வழக்கு பொய்யான வழக்கு என்றாலும் பிரதிவாதிகளின் நற்பெயருக்கு களங்கம் இழைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முதன்மை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் பொய்யானவை என்றாலும் நீதிமன்றத்தில் பொய்யாக

**சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகளால் எங்களுக்கு இழப்போ, எந்த மனவேதனையோ ஏற்படவில்லை என்றால் சரியல்ல.**